## ஐக்கிய தேசிய அணியினரின் தேர்தல் முனைப்புகள்

### தீர்வுகளைக் கொடுத்த கட்சி

ஐக்கிய தேசிய கட்சி பற்றிய தமிழர்களின் நிலைப்பாடு பல காலங்களாக அதற்கு ஆதரவாகவே அமைந்து வந்துள்ளன. தேசிய மட்ட தேர்தல்களில் கூடிய பங்கான தமிழ்மக்கள் வடகிழக்கிலும் சரி கொழும்பிலும் சரி தங்கள் வாக்குகளை ஐக்கிய தேசிய கட்சியினருக்கு அளித்து வந்துள்ளனர். சனாதிபதித் தேர்தலின் போதெல்லாம் தமிழ் மக்களின் வாக்குகளை ஐக்கிய தேசிய கட்சி பெற்று வெல்லுவதற்குரிய ஆதாரமான வாக்குகளாக அமைந்து வந்துள்ளது. 1977ம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்தனா தலைமையில் ஐ.தே.க. 3/5 இலும் கூடியதான (140) பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றி பலமிக்க ஆட்சியை அமைத்து 17 வருடங்கள் ஆட்சி புரிந்தது. ரணசிங்க பிரேமதாச பிரதமராக நியமிக்கப்பட்டார். சுதந்திரக் கட்சிக்கு 08 ஆசனங்களே கிடைத்தன. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 18 ஆசனங்கள் கிடைத்து தற்போதைய நிலைமை போன்று எதிரக்கட்சித் தலைவராக தமிழர் விடுதலைக் கூட்ணியின் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் தெரிவானார்.

1982இல் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் ஐ.தே.க. ஆட்சி மேலும் 06 ஆண்டுகளுக்கு பதவி நீடிக்க மக்கள் ஆணை கிடைத்தது. 1983 இல் கொழும்பு இனக்கலவரம் பின் 1987இல் மாகாண சபை உருவாக்கம். 1988இல் நடைபெற்ற சனாதிபதி தேர்தலில் பிரதமர் பிரேமதாச சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். இக்காலகட்டத்தில் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்கியது சனசக்தி உதவி கம்உதாவ வீடுகள் அமைக்கும் திட்டங்கள் கச்சேரி நிர்வாக அதிகாரம் மாவட்டதிற்கு பரவலாக்கம் ஆடைத் தொழிற்சாலைகள் உருவாக்கம் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை போன்று பல வேலைத் திட்டங்களை கொண்டு வந்து நடைமுறைப்படுத்திய காலம். 1889இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி ஆட்சி அமைத்து டி.பி.விஜயதுங்க பிரதமராக நியமிக்கப்பட்டார். 1993இல் பிரேமதாசா கொல்லப்பட்டு அமரரானானபோது ̇. பிரதமராயிருந்த டி.பி.விஜயதுங்க அரசியலமைப்பின்படி சனாதிபதியானார். பிரதமராக ரணில் விக்கிரமசிங்க தெரிவானார்.

1994ம் ஆண்டு சுதந்திரக்கட்சி சார்பில் சந்திரிக்கா ஆட்சி பீடம் ஏறிய போது மட்டும் தமிழர்களும் சந்திரிக்காவை ஆதரித்து வாக்களித்ததை மறுக்க முடியாது. ஏனெனில் சந்திரிக்காவின் பிரவேசம் தமிழ் மக்களின் மனதில் ஒரு சமாதான தேவதையின் வருகை என பதிந்துகொண்டது. சிங்கள மக்களும் போரின் அகோரத் தன்மையை பொறுக்க முடியாது ஒரு சமாதான அரசியல் தீர்வு சந்திரிக்காவினால்

கிடைக்குமென எதிர்பார்த்து ஆதரித்தனர். 62.28% வாக்குகளைப் பெற்று சனாதிபதியான ஒரே ஒருவர் சந்திரிக்கா குமாரணதுங்க என்பது அவருக்குள்ள பெருமை.

1999ம் ஆண்டு சனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு வாய்ப்பு இருந்தது. அதேநேரம் சந்திரிக்காவுக்கும் கிடைக்காது என்ற நிலைமை இருக்கவில்லை. அந்த சரிசமமான இறுக்கமான போட்டியின்போது புலிகளினால் சந்திரிக்காவின்மீது நடத்தப்பட்ட பாரிய தற்கொலைக் குண்டுத் தாக்குதலினால் ஏற்பட்ட சிங்கள மக்களின் சந்திரிக்கா மீதான அனுதாப அலை அவரை வெற்றி பெறச் செய்தது.

இலங்கை அரசியலில் ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாறி மாறி ஆட்சி பீடம் ஏறிவந்ததே வரலாறு. ஆனால் 05 வருட ஆட்சியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 1970ல் ஆட்சி பீடம் ஏறி 02 வருடங்கள் அதிகமாக ஆட்சியிலிருந்தார். இக்காலத்தில் குடியரசு அரசியலமைப்பை கொண்டுவந்து அதன்மூலம் சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு பாதுகாப்பாயிருந்த பிரிவு 29 (2) என்ற சட்டம் அரசியலமைப்பில் சேர்க்கப்படாது இல்லாதொழிக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் இச்சுதந்திரக்கட்சி ஆட்சிக்காலத்திலேதான் கல்வித்தரப்படுத்தல் (Standardization) கொண்டு வரப்பட்டு தமிழ் மாணவ மாணவிகளின் பல்கலைக்கழக புகுதல் மட்டுப்படுத்தப்பட்டது. பின் 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலை வைத்தார். அதன்பிறகு ஆட்சி பீடம் ஏறிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சி புதிய அரசியலமைப்பை 1978ம் ஆண்டு உருவாக்கி நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி என்ற துடினமாக செயற்படக் கூடிய ஒரு அரசை ஏற்படுத்தினார். அதன்பின் 1982ல் ஒரு பொதுசன வாக்கெடுப்பின் மூலம் 06 வருடங்களுக்கு சனாதிபதிப் பதவியை நீடித்துக் கொண்டார். இதனால் சனாதிபதி தேர்தல் 10 வருடங்களுக்குப் பின்னர் 1988ம் ஆண்டு நடைபெற்றது. அந்த தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளரான ஆர்.பிறேமதாச சனாதிபதியானார். 1989ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க.வின் டி.பி விஜயதுங்க பிரதமரானார். 1992ம் ஆண்டில் இறக்கும் வரை சனாதிபதியாக பிறேமதாச பதவியிலிருந்தார். அதன் பின் அப்போது பிரதமராகவிருந்த டி.பி. விஜயதுங்க அரசியலமைப்பின்படி சனாதிபதியானார்.

தொடர்ந்து 17 வருடங்கள் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி புரிந்த பின் சுதந்திர கட்சியின் ஆட்சி 1994ம் ஆண்டு சந்திரிக்காவின் வருகையால் ஏற்பட்டது. அதன் பின் 1998த் ஆண்டு நடைபெற்ற சனாதிபதி தேர்தலிலும் சந்திரிக்காவே சனாதிபதியானார். 2000ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலிலும் முஸ்லிம் காங்கிரசின் ஆதரவுடன் ஆட்சி அமைத்து ஆனால் அவ்வாட்சி நிலைக்கமுடியவில்லை. சுதந்திரக் கட்சியின் ஆட்சி 07 வருடங்களே. 2001ம் ஆண்டு மீண்டும் பாராளுமன்ற தேர்தல் இடம்பெற்று ஐக்கிய தேசிய கட்சியின் ரணில் விக்கிரமசிங்க பிரதமரின் தலைமையில் ஆட்சி அமைத்தது. இக்காலத்திலேயே நோர்வேயின் அனுசரணையுடன் புலிகளுடன் சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்று கண்டி வீதி திறக்கப்பட்டு புலிகளுக்கென பிரதேசங்கள் ஒதுக்கப்பட்டன. தாய்லாந்து ஒஸ்லோ டோக்கியோ என சமாதானப்

பேச்சுவார்த்தையை அரசு புலிகள் அமைப்புடன் நடாத்தியது. இந்த ஆட்சியில் சனாதிபதி ஒரு கட்சியும் பாராளுமன்றம் வேறொரு கட்சியுமாக இருந்தமையால் சந்திரிக்கா தனது நிறைவேற்று சனாதிபதி அதிகாரத்தைக் கொண்டு ஐக்கிய தேசிய கட்சியின் இரு பிரதான அமைச்சர்களை நீக்கி தனது கட்சி உறுப்பினர்களை அமைச்சராக்கியதை தொடர்ந்து ஏற்பட்ட குழப்பநிலைமையில் பாராளுமன்றத்தை சனாதிபதி சந்திரிக்கா 2004ம் ஆண்டு கலைத்து தேர்தலை வைத்தார். இத்தேர்தலில் சுதந்திரக் கட்சி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கி ஆட்சி அமைத்தது.

அதன் பின்னர் 2005ம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதி தேர்தலில் சுதந்திரக் கட்சி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சி ரணில் விக்கிரமசிங்கவை நிறுத்தியது. இந்தத் தேர்தலில் புலிகளின் ஆதரவினால் மகிந்த ராஜபக்ஷ 181786 வாக்கு வித்தியாசத்தில் வெற்றியடைந்தார். வடக்கு மாகாண தமிழ் மக்களில் 1.21% மான மக்களே வாக்களிப்பில் பங்குபற்றியிருந்தார்கள். இந்த குறைவான வாக்களிப்பு புலிகள் அமைப்பின் அச்சுறுத்தல் காரணமாகவே ஏற்பட்டது. 05 இலட்சம் வாக்குகளுக்கு மேல் இருந்த வடக்கு வாழ் மக்களின் வாக்குகள் புலிகளின் அச்சுறுத்தலின்றி தேர்தல் நடைபெற்றிருந்தால் ரணில் விக்கிரமசிங்க 03 இலட்சத்திற்கும் அதிகப்படியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றியடைந்திருப்பார்.

2010ம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதி தேர்தல் புலிகள் அமைப்பை மகிந்த ராஜபக்ஷ அரசு அழித்தொழித்த ஒரு வருட காலத்திற்குள் நடைபெற்றதினால் தென் இலங்கை சிங்கள மக்களின் யுத்த வெற்றி வீரனாக 02வது கைமுனுவாக மஹிந்த மதிக்கப்பட்டதினால் அவரின் வெற்றிவாய்ப்பு சந்தேகத்திற்கு இடமின்றி உறுதியானது. அதனால் அவரை தோற்கடிப்பதற்காக யுத்த களத்தில் புலிகளை வென்ற இராணுவ முப்படைகளின் தலைவராயிருந்த சரத் பொன்சேகாவை ஐக்கிய தேசிய அணியினர் தங்களது வேட்பாளராக நிறுத்தினார்கள். இருந்தும் மகிந்த ராஜபக்ஷாவை தோற்கடிக்க முடியவில்லை. 2015ம் ஆண்டு வரையிலும் சுதந்திரக்கட்சியின் ஆட்சி 10 வருடங்களாக தொடர்ந்தது.

இந்த ஆட்சி மாற்றங்களை விபரமாக தந்திருப்பது இலங்கையின் வாக்காளர் பெரும் மக்கள் என்ன விதமான பின்புலத்தில் தேர்தல்களில் கட்சிகளுக்கு மாறிமாறி வாக்களித்து வந்துள்ளார்கள் என்பதை வெளிக்காட்டுவதன் மூலமாக இனிவரும் காலங்களில் எவ்வாறு அமையுமென ஒரு கணிப்பீடு செய்வதற்கேயாகும்.

1977ல் பொருளாதார மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற மக்களின் மனமாற்றம் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் தலைமையில் ஐக்கிய தேசிய கட்சி அரசை 3/5 பெரும்பான்மைக்கும் கூடுதலான உறுப்பினர்களை தெரிவு செய்து ஆட்சியில் அமர்த்தியது. 1994ம் ஆண்டு யுத்தத்தை ஒழித்து இனங்களுக்கிடையிலான சமாதானத்தை உருவாக்கவென 62% மேற்பட்ட வாக்குகளை அளித்து சந்திரிக்கா பண்டாரநாயக்காவை சமாதான தேவதையாக வெற்றி கொள்ள வைத்தார்கள். 2005ம் ஆண்டு தேர்தல் வடமகாண தமிழர்களின் வாக்குகள் அச்சம் காரணமாக இடப்படாததினால் வெகு அற்ப வாக்கு வித்தியாசத்தில் மகிந்த ராஜபக்ஷ

வெற்றியடைந்தார். 2015ம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷாவின் ஊழல் ஆட்சி சர்வாதிகார ஆட்சி குடும்ப ஆட்சி மற்றும் வீண்விரயம் அதிகார துஸ்பிரயோகம் ஆட்கடத்தல் போன்ற வேறும்பல பிழையான செயற்பாட்டின் காரணங்களால் மகிந்த ராஜபக்ஷாவை தோற்கடிக்க முடிந்தது.

சுதந்திரக்கட்சியிலிருந்த சிறிசேனாவையும் வேறு பலரையும் ஐக்கிய தேசியக் கட்சி அணியினர் உள்வாங்கியதாலும் தமிழ் பேசும் மக்களின் ஒட்டு மொத்த வாக்களிப்பாலும் அத்துடன் ஐக்கிய தேசிய கட்சிக்கிருந்த நிரந்தர வாக்குகளினாலும் மைத்திரிபால சிறிசேனா சனாதிபதியாகி ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்க முடிந்தது. சிறிசேனாவுடன் வந்தவர்கள் சுதந்திரக் கட்சியைக் கைவிட்டு ஐ.தே.க. வில் சேராவிட்டாலும் ஐ.தே.க. அணியில் இணைந்துள்ளார்கள்.

இதனால் ஐக்கிய தேசிய கட்சி அணியினர் சுதந்திரக்கட்சியின் ஒரு பகுதியினரையும் சேர்த்து இரு கட்சி தேசிய அரசாங்கத்தை அமைத்து பல ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதை பார்க்க கூடியதாக உள்ளது. அரசியல் அமைப்புக்கு 19ம் திருத்தச்சட்டத்தை கொண்டு வந்ததன் மூலம் சனநாயகத்தை உறுதிப்படுத்தி முக்கிய பல விடயதானங்களுக்கு சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைத்தும் வேறும் பல சுயாதீனமாக இயங்கக்கூடிய தனிநபர்களை நியமித்தும் அவற்றிற்கு சனாதிபதியோ அல்லது பிரதமரோ தலையிட முடியாதவாறு கட்டுப்பாடுகள் அற்ற சுயாதீனமாக செயற்பட வழிவகுத்திருப்பதையும் காணலாம். மேலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை கொண்டு வந்ததினால் அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மையை கொண்டுவந்துள்ளது பொது மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதை தவிர்ப்பதாக அமைகின்றது. இவற்றைவிட கல்வி சம்மந்தமாக கல்வி கற்கும் சிறு வயதினருக்கு காப்புறுதி திட்டத்தை அரச பணத்தில் உருவாக்கியமை போன்ற பல திணைக்களங்களில் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கம் மக்கள் நலனை மேம்படுத்தி செயற்படுவதனால் இந்த கூட்டு தேசிய அரசாங்கம் பாராட்டுக்களை பெற்று வருகின்றது. மலையக மக்களுக்கு வீட்டுடனான காணி வழங்குதல் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் முன்னைய அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகளை விடுவித்தல் காணாமல் ஆக்கப்பட்டோர் சம்மந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண முற்படுதல் அரசியல் கைதிகளின் விடயத்தில் அக்கறை காட்டுதல் தமிழ் பேசும் மக்களுக்கான அதிகாரப்பகிர்வு திட்டத்தை புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் மூலம் ஏற்படுத்த முயற்சித்தல் போன்ற சமாதான இலங்கையை கட்டியெழுப்பும் செயற்பாடுகளும் காணப்படுகின்றன.

சுதந்திர கட்சியிலிருந்து பிரிந்து பொதுசன பெரமுன எனும் மொட்டு சின்ன கட்சியை ஆரம்பித்தவர்களில் பலர் முன்னைய அரசாங்கத்தின் ஊழல்களிலும் நிதி மோசடிகளிலும் அதிகார துஸ்பிரயோகங்களிலும் வேறும் கிரிமினல் குற்றங்களிலும் ஈடுபட்டவர்களாக சி.ஐ.டி விசாரணைகளிலும் நிதி மோசடி ஆணைக்குழு முன்பாக விசாரணைகளிலும் சிலர் தற்போது நீதிமன்ற வழக்குகளிலும் தோன்ற நிர்ப்பந்தம்

எற்பட்டுள்ளது. இவர்களில் ஒருவரான துமிந்த சில்வாவுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டணையை அண்மையில் உயர் நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்துள்ளது. டன்ஸ்டன் பெர்ணான்டோக்கு எதிரான ச.தோ.ச ஊழல் வழக்கு கோத்தபாயாவுக்கு எதிரான அரச சொத்தில் ஞாபக மன்றம் கட்டிய வழக்கு விமல் வீரவன்சாவுக்கும் மனைவிக்கும் எதிரான வாகனம் வீடு அதிகார துஸ்பிரயோம் பாஸ்போட் வழக்குகள் உதய கமன்பிலவுக்கு எதிரான அவுஸ்திரேலியா பண பரிமாற்ற வழக்கு மகிந்தானந்த அழுத்கமகே மற்றும் கெஹலிய ரம்புக்வெல ஆகியவர்களுக்கு எதிரான நிதி மோசடி வழக்கு பசில் ராஜபக்ஷாவுக்கெதிரான மல்வானை காணி வீடு சொத்து வழக்கு போன்றவை விசாரணை ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றன. விசேட நீதிமன்றங்களில் நடைபெறுவதினால் அவை விரைவாக முடிவுற்று குறிப்பிட்ட முக்கிய புள்ளிகளும் கம்பிகளுக்கு பின்னால் செல்லக்கூடிய வாழ்க்கை அமையலாம். புலிகளை நிர்மூலமாக்கிய மஹிந்த ராஜபக்ஷா 15 அல்லது 20 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து ஆட்சியில் இருப்பார் என்ற திடமான நம்பிக்கை இவர்களை அச்சமின்றி துணிவுடன் ஊழல்களிலும் நிதி மோசடிகளிலும் கிரிமினல் குற்றங்களிலும் ஈடுபடச் செய்யத் தூண்டியது எனலாம். இவர்கள் ஐக்கிய தேசிய கட்சியினரின் தேசிய அரசை எப்படியாவது கவிழ்த்து இடைக்கால அரசையாவது தங்களுக்குள் ஏற்படுத்தி குற்ற விசாரணைகளிலிருந்து தங்களை பாதுகாப்பதே ஒரே நோக்காக உள்ளார்கள். சனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவையும் அவருடன் அமைச்சர்களாகவுள்ள 23 சுதந்திரகட்சியினரையும் பிரித்தெடுத்து தேசிய அரசை பலவீனமாக்க முயற்சிகளை மேற்கொள்கின்றனர். உழல் பேர்வழியான மஹிந்த ராஜபக்ஷாவையும் ஊழலை ஒழித்துக் கட்டுவேனென முழக்கமிட்டு வரும் மைத்திரிபால சிறிசேனாவையும் ஒன்றிணைத்து ஆட்சியை கைப்பற்ற நினைப்பது சாத்தியமானதென கூறமுடியாது. ஆனால் அரசியலில் எதுவும் நடக்கலாம் என்பதையும் மனதிற்கொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சியினரின் தற்போதைய செயற்பாடுகளும் திட்டங்களும் பொருளாதாரத்தை ஏற்றுமதி மூலம் சரிப்படுத்தவும் ஏற்கனவே மீன் ஏற்றுமதி தடையை நீக்கியது ஜி.எஸ்.பி வரிச்சலுகை போன்ற பல நாட்டுக்கு நன்மையான விடயங்களில் ஒரு போற்றத்தக்க நடவடிக்கைகள் எடுத்திருப்பதும் பல புதிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பித்திருப்பதும் ஐக்கிய தேசிய கட்சியினரின் சனாதிபதி அல்லது பாரளுமன்ற ஆட்சிக்கான வெற்றி வாய்ப்புக்கு உதவ கூடியதாக அமையலாம்.

தமிழ் மக்களிடையே ரணில் விக்கிரமசிங்க பற்றிய விமர்சனம் தொடர்ச்சியான தோல்வி அடைந்தவர் என்ற விதத்தில் இருந்தது. இது இந்தத் தோல்வி எவ்வாறு நடைபெற்றது என்பதை ஆராயாது முற்போடப்பட்டவையாகும். 2001ம் ஆண்டு ஆட்சியமைத்த ரணிலின் ஆட்சி சந்திரிக்காவினால் 2004லில் கலைக்கப்பட்டு பதவி இழந்தார். 2005ம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதி தேர்தலில் புலிகளின் அச்சுறுத்தலினால் வடமாகாண மக்கள் வாக்களிக்கச் செல்லாததால் வெல்லும் வாய்ப்பை தவற விட்டார். 2009ம் ஆண்டு மே 19ம் திகதி புலிகள் இயக்கம் அழித்தொழிக்கப்பட்டதினால் அதைச் செய்வித்த அரசியல் தலைவரான மகிந்த ராஜபக்ஷவுக்கெதிராக எந்த அரசியல் தலைவரோ கட்சியோ கிட்ட நெருங்க முடியாத

நிலைமை உருவாகியிருந்தது. இந்தகாலகட்டத்தில் நடைபெற்ற சனாதிபதி தேர்தல்களிலோ பாராளுமன்ற தேர்தல்களிலோ அல்லது மாகாண சபை பிரதேச சபை தேர்தல்களிலோ ராஜபக்ஷவின் சுதந்திரக்கட்சியை விட வேறு எந்தக்கட்சியும் வெல்லுவதற்கு முடியாத நிலைமை இருந்தது. அவ்வாறிருந்தும் மேல் மாகாணசபை (கொழும்பு) ஊவா மாகாணசபை (பதுளை) ஆகியலற்றின் தேர்தல்களில் ஐ.தே.க மகிந்தாவுக்கு ஈடுகொடுத்து முன்னேறி வந்திருந்தது. 2015ம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதி தேர்தலில் 50 இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளாகவே அமைந்திருந்தது என்பதை மறுக்க முடியாது. இது அதன்பின் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலிலும் 10 ஆசனங்களை சுதந்திரக் கட்சியை விட அதிகமாக பெற்று நிரூபணமாக்கப்பட்டுள்ளது.

இனிவரும் தேர்தல்களில் ஐ.தே.கட்சிக்கு தனித்து அரசமைக்கும் வெற்றி கிடைத்தாலும் சனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க வந்தாலும் தற்போது சுதந்திரக் கட்சியை சேர்ந்த அமைச்சர்களாகவுள்ளவர்கள் அத் தேர்தலில் தெரிவாகி இருப்பின் அவர்களையும் முடியுமானால் மைத்திரிபால சிறிசேனாவையும் இணைத்து மீண்டும் ஒரு தேசிய அரசை அமைக்கவே ஐ.தே.க. யின் எதிர்பார்ப்பாக இருக்கும். இது தீர்க்கப்படாத தேசிய பிரச்சினைகளுக்கு முடிவெடுக்க தேவையான 2/3 ஆசன பெரும்பான்மை இருக்கவேண்டும் என்பதற்காகவே.